### மூன்று எழுத்தாளர்களுக்கு உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள்!

# தமிழறிஞர்கள் வே.ஆனைமுத்து - கவிஞர் ஈரோடு தமிழன்பன் நூல்கள் நாட்டுடைமை!

## நூலுரிமைத் தொகை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச் 7 -

கனவு இல்லத் திட்டத்தின் கீழ் மூன்று எழுத்தாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகளை வழங்கி, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் ஆக்கங்களை எளிய தமிழில் மக்கள் பதிப்பாக மொழிபெயர்த்து மூன்றாம் கட்டமாக 73 தொகுதிகளை வெளியிட்டு, நினைவில் வாழும் தமிழறிஞர்கள் வே.ஆனைமுத்து மற்றும் கவிஞர் ஈரோடு தமிழன்பன் ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கி நூலுரிமைத் தொகைக்கான காசோலைகளை குடும்பத்தினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லத் திட்டத்தின் கீழ், முனைவர் திருமதி தாயம்மாள் அறவாணன், பொன்னீலன் (எ) பக்தவத்சலம் பி.எஸ்.கே. மற்றும் முனைவர் ஆ.இரா.வேங்கடாசலபதி ஆகிய மூன்று எழுத்தாளர்களுக்கும் 4 கோடியே 58 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய் குடியிருப்புக்கான ஆவணங்களை வழங்கினார். மேலும், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் ஆக்கங்களை எளிய தமிழில் மக்கள் பதிப்பாக மொழிபெயர்த்து மூன்றாம் கட்டமாக 73 தொகுதிகளை வெளியிட்டு, நினைவில் வாழும் தமிழறிஞர்கள் வே.ஆனைமுத்து மற்றும் கவிஞர் ஈரோடு தமிழன்பன் ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமை செய்து நூலுரிமைத் தொகைக்கான காசோலைகளை குடும்பத்தினருக்கு வழங்கினார்.

**கனவு இல்லத் திட்டத்தின் கீழ் மூன்று எழுத்தாளர்களுக்கு**

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள் வழங்குதல்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு ஞானபீட விருது, சாகித்திய அகாதமி விருது (தலைசிறந்த தமிழ்ப் படைப்பிற்கு), தொல்காப்பியர் விருது, கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது, உலகளாவிய நோபல் விருது பெற்ற விருதாளர்களுக்குக் கனவு இல்லத் திட்டம் வாயிலாக உயர் வருவாய்ப் பிரிவினருக்கான குடியிருப்பு வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 3.06.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, 2021-2022ஆம் நிதியாண்டில் கவிஞர் புவியரசு (எ)

சு.ஜகன்னாதன், முனைவர் கு.மோகனராசு, கவிஞர் ஈரோடு தமிழன்பன் (எ)

ந.செகதீசன், பூ.மாணிக்கவாசகம், வெ.அண்ணாமலை, முனைவர்

இ.சுந்தரமூர்த்தி, கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், சோ.தர்மராஜ், முனைவர் மா. இராமலிங்கம் ஆகிய 9 அறிஞர்களுக்கும்,

2022-2023ஆம் நிதியாண்டில் முனைவர் பொன். கோதண்டராமன், சு.வெங்கடேசன், முனைவர் ப. மருதநாயகம், முனைவர் இரா. கலைக்கோவன், எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன், கா.ராஜன், ஆர்.என்.ஜோடிகுரூஸ்,

சி. கல்யாணசுந்தரம் ஆகிய 8 அறிஞர்களுக்கும்,

2023-24ஆம் நிதியாண்டில் நாஞ்சில் நாடன் (எ) சுப்ரமணியம் கணபதி, இந்திரா பார்த்தசாரதி, முனைவர் க.இராமசாமி ஆகிய 3 அறிஞர்களுக்கும்,

2024-25 ஆம் நிதியாண்டில் எழுத்தாளர் தேவிபாரதி (எ) ந. ராஜசேகரன், திருமதி சி.எஸ். இலட்சுமி (எ) அம்பை ஆகிய இருவருக்கும் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டது.

தற்போது 2025-26-ஆம் நிதியாண்டிற்கு 2025ஆம் ஆண்டிற்கான கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது பெற்ற முனைவர் திருமதி தாயம்மாள் அறவாணன், 1994ஆம் ஆண்டிற்கான "புதிய தரிசனங்கள்" எனும் நூலிற்காக சாகித்திய அகாதமி விருது பெற்ற பொன்னீலன் (எ) பக்தவத்சலம் பி.எஸ்.கே., 2024 ஆம் ஆண்டு "திருநெல்வேலி எழுச்சியும், வ.உ.சி.யும் 1908" எனும் நூலிற்காக சாகித்திய அகாதமி விருது பெற்ற முனைவர் ஆ.இரா.வேங்கடாசலபதி ஆகிய 3 அறிஞர்களுக்கு 4 கோடியே 58 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய் குடியிருப்புக்கான ஆவணங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இதுவரை மொத்தம் 25 எழுத்தாளர்களுக்கு 29 கோடியே 64 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கனவு இல்லம் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**அண்ணல் அம்பேத்கரின் ஆக்கங்களை எளிய தமிழில் மக்கள் பதிப்பாக மொழிபெயர்த்து மூன்றாம் கட்டமாக 73 தொகுதிகள் வெளியிடுதல்**

"இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தையும், முற்போக்கு சமத்துவ இந்தியாவின் சிற்பியுமான அண்ணல் அம்பேத்கரின் சிந்தனைகளைப் பரப்புவதற்காக, அவரது படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்படும். இதற்காக அரசால் ஐந்து கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும்" என நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் 2023—2024-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்பை தமிழ் வளர்ச்சித் துறை மூலமாக மூன்று ஆண்டுகளில் செயல்படுத்த அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி, அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் மொழிபெயர்ப்பட்டு 10 தொகுதிகளை முதல் கட்டமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.01.2025 அன்று வெளியிடப்பட்டன. தொடர்ந்து இரண்டாம் கட்டமாக, 17 தொகுதிகள் 14.8.2025 அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மூன்றாம் கட்டமாக, அம்பேத்கர் நடத்திய மராத்தி இதழ்களில் வெளிவந்த கடிதங்கள், அறிக்கைகள் மற்றும் பல பயனுள்ள பனுவல்கள் தற்போது மராத்தியிலிருந்து நேரடியாக தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகள் செம்மையாகவும் விரைவாகவும் நடந்தேறி அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் மொத்தம் உள்ள 100 தொகுதிகளும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, 27 தொகுதிகள் வெளியிடப்பட்ட நிலையில் தற்போது எஞ்சியுள்ள 73 தொகுதிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

நினைவில் வாழும் தமிழறிஞர்கள் வே.ஆனைமுத்து மற்றும் கவிஞர் ஈரோடு தமிழன்பன் ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கி நூலுரிமைத் தொகை வழங்குதல்

தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

தமிழறிஞர்களின் படைப்புகள் உலக மக்கள் அனைவரிடமும் சென்று சேர வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு இதுவரை 195 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு 15.82 கோடி ரூபாய் நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது, இதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 139 தமிழறிஞர்களுக்கு 9.71 கோடி நூலுரிமைத் தொகையும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் 37 அறிஞர்களின் 1802 நூல்கள் நாட்டுடைமை செய்யப்பட்டு 4.25 கோடி ரூபாய் நூலுரிமைத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அனைத்து நூல்களும் நூலுரிமைத்தொகை ஏதுமின்றி நாட்டுடைமையாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தகுந்தது.

**தமிழறிஞர் வே.ஆனைமுத்து**

வே.ஆனைமுத்து அவர்கள் அன்றைய திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், முருகன்குடி எனும் சிற்றூரில் 21.06.1925இல் பிறந்தார். தந்தை பெரியாரின் தன்மான இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட இவர் 1952 முதல் தந்தை பெரியார் நடத்திய பெரும்பாலான கூட்டங்களில் பங்குகொண்டார். 11.01.1957இல் 'குறள்முரசு' எனும் கிழமை இதழைத் தொடங்கினார். 1957இல் நடைபெற்ற அரசியல் சட்ட எதிர்ப்புக் கிளர்ச்சியில் பங்குகொண்டு 18 திங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை பெற்றார். 1973இல் திருச்சியில் பாவேந்தர் அச்சகத்தை நிறுவினார். 1974இல் சிந்தனையாளன் எனும் கிழமை இதழையும் 1976இல் பெரியார் சம உரிமைக் கழகம் என்ற புதிய இயக்கத்தையும் தொடங்கினார். 1979இல் அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், மலைவாழ் மக்கள், மதச் சிறுபான்மையினர் பேரவை மற்றும் பெரியார் சம உரிமைக் கழகம் ஆகியவற்றின் சார்பில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவினை தில்லி மாநகரில் நடத்திய பெருமைக்குரியவர். இவரின் தொகுப்பு நூலான 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்' 20 தொகுதிகளாக மொத்தம் 9,300 பக்கங்களையும் வே. ஆனைமுத்து அவர்களின் எழுத்துக்களையும் பேச்சுக்களையும் தொகுத்து வெளியிடப்பட்ட 'ஆனைமுத்து கருத்துக் கருவூலம்' 16 தொகுதிகளாக மொத்தம் 5,700 பக்கங்களையும் கொண்டுள்ளன.

இத்தகைய சிறப்பினைப் பெற்ற வே.ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு சிறப்பு நேர்வாக அவரின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கம் செய்யப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களான திருமதி அரி.தமிழ்ச்செல்வி, ஆ.பன்னீர்செல்வம், ஆ.வெற்றி, ஆ.வீரமணி, திருமதி ஆ.அருள்மொழி, ஆ.கோவேந்தன் ஆகியோருக்கு நூலுரிமைத்தொகை 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன்

ஈரோடு தமிழன்பன் அவர்கள் ஈரோடு மாவட்டம், சென்னிமலை என்ற ஊரில் 28.09.1933 அன்று பிறந்தார். ஈரோடு தமிழன்பன் அவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகள், சிறுகதைகள், புதினம், நாடகம், கட்டுரைகள், திறனாய்வு /ஆராய்ச்சி நூல்கள், மொழிபெயர்ப்புகள் உள்ளிட்ட 135 நூல்கள் எழுதியுள்ளார். ஈரோட்டில் மதரசா இசுலாமிய உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர், சென்னைப் புதுக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். 1990ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் பாரதிதாசன் விருதையும் 2004இல் "வணக்கம் வள்ளுவ" என்னும் கவிதைத் தொகுப்பிற்காக சாகித்திய அகாதமி விருதையும் பெற்றவர். கவிஞர், சொற்பொழிவாளர், திரைப்படப் பாடலாசிரியர், செய்தி வாசிப்பாளர், அரிமா நோக்கு இதழாசிரியர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர். மேலும், இவர் தமிழ்நாடு அரசின் அறிவியல் தமிழ் மன்றத்தின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

இத்தகைய சிறப்பினைப் பெற்ற ஈரோடு தமிழன்பன் (ந.ஜெகதீசன்) அவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கம் செய்யப்பட்டு அவரின் வாழ்க்கைத் துணையான திருமதி தி.பா. சாந்தகுமாரி அவர்களுக்கு நூலுரிமைத் தொகை 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள், வல்லுநர் குழு உறுப்பினர்கள் புலவர் செந்தலை ந.கவுதமன், பேராசிரியர் வீ. அரசு, முனைவர் மு.வளர்மதி, அ.மதிவாணன், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தைச் சேர்ந்த சிவக்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி - மேற்குவங்கத்திற்கு மாற்றம்!

### தமிழ்நாட்டுக்கு புதிய ஆளுநர் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 7 -

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி மேற்கு வங்க ஆளுநராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இது தொடர்பான உத்தரவை குடியரசுத் தலைவர் பிறப்பித்துள்ளார். தற்போது கேரள ஆளுநராக இருக்கும் ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகருக்கு தமிழ்நாடு ஆளுநராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களுக்கு விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் வரும் நிலையில் இந்த அவசர மாற்றம் நிகழ்ந்துள்ளது.



விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஒன்றியம் பொன்பத்தி ஊராட்சி அஞ்சாஞ்சேரி கிராமத்தில் வசித்து வந்த பழங்குடியின மக்களுக்கு செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார், வட்டாட்சியர் கார்த்திகேயன், மாவட்ட விவசாய அணித் தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன், மாவட்டக் கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், ஊராட்சி மன்றத் தலைவர் அனுசுயா மணி பாலன் உள்ளனர்.

# அனைவரையும் அரவணைக்கும் நம் தலைவரின் கரம் பலம் பெறுகிறது!

# குறுக்குவழி பழனிச்சாமியின் புலம்பல் தொடருகிறது!

முதல்வராக இருந்த ஓ.பி.எஸ். எப்படி தி.மு.க.விற்கு செல்லலாம் என தமிழிசையும், ஜெயக்குமாரும் குதிக்கின்றனர்.

ஒரு காலத்தில் அண்ணா மறைந்த போதும், வெளிநாடு சென்றபோதும், தற்காலிக முதல்வராக, ஏன் பொதுச் செயலாளராக இருந்த நாவலர் தி.மு.க.வை விட்டுவிட்டு, அதிமுகவிற்கு வந்த போது இனித்தது. இன்று முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ். தி.மு.க.வுக்கு சென்றால் கசக்கிறதா?

ஏதோ புதிய முடிவை ஓ.பி.எஸ். எடுத்தாரா?

நாவலர் திமுகவை விட்டு நீக்கப்படவில்லை. கருப்பு சிவப்பு கரை வேட்டி கட்டக்கூடாது என கோர்ட்டில் தடை வாங்கவில்லை. கடைசி நிமிடம் வரை பொதுச் செயலாளராகத்தான் இருந்தவர்.

ஆனால் ஓ.பி.எஸ். அப்படி அல்ல. நிராயுதபாணியாக நின்றவர். யாருக்காக போராடினாரோ அந்த ராமரையே பிடித்துக் கொண்டு ஓ.பி.எஸ்ஸை தனிமையாக்கினீர்கள். பணம் இருந்தால் எதுவும் செய்யலாம் என்பதற்கு பழனிச்சாமி சாட்சி. மனம் இருந்தால் நல்ல முடிவு எடுக்கலாம் என்பதற்கு ஓ.பி.எஸ். மறு சாட்சி.

வெளியில் செல்லும்போது ஜெயலலிதா படத்துடன் வலம் சென்ற ஓபிஎஸ் எப்படி திடீரென ஸ்டாலின் படத்தை போட்டு செல்ல மனம் வந்தது என வானதி கேட்டுள்ளார்.



ஆறு ஆண்டு காலம் கலைஞர் படத்தை போட்டு, எம்.பி.ஆக இருந்த கே.பி.ராமலிங்கத்தால் எப்படி திடீரென மோடி படத்தை போட முடிந்தது என கேளுங்கள் வானதி.

எத்தனை ஆண்டுகாலம் ஜெயலலிதா படத்தை போட்டு திரிந்து எம்.பி. ஆக இருந்த சசிகலா புஷ்பாவுக்கு எப்படி திடீரென மோடி படத்தை மாற்ற முடிந்தது என கேட்பாரா?

தன் சிறு வயதிலிருந்து தந்தை குமரி அனந்தன் கையைப் பிடித்து சத்தியமூர்த்தி பவனில் சுற்றிய தமிழிசையால் எப்படி மோடி படத்தை மாற்ற முடிந்தது கேளுங்கள்.

சரத்குமார் படத்தை போட்டுத் திரிந்த கரு. நாகராஜனால் எப்படி மோடி படத்தை மாற்ற முடிந்தது கேளுங்கள்.

ஒன்றிய அமைச்சர் வரை அழகு பார்த்த கலைஞரை விட்டுவிட்டு மாநில துணைத்தலைவர் பதவிக்காக ஒரே நாளில் எப்படி காவிக் கொடிக்கு மாற முடிந்தது என நடிகர் நெப்போலியனை கேட்பீர்களா?

இத்தனை நாள் மூவர்ண கொடியுடன் சுற்றிய உங்களால் எப்படி இருவர்ண காவிக் கொடிக்கு மாற முடிந்தது என கராத்தே தியாகராஜனை பார்த்து கேட்பீர்களா?

இத்தனை நாள் திமுக மாநில துணைப் பொதுச் செயலாளராகவும், துணை சபாநாயகராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்து, கலைஞரை சுமந்த உங்களால் எப்படி காவியக் கொடியை சுமக்க முடிகிறது என வி.பி. துரைசாமி இடம் கேட்பீர்களா?



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

உங்கள் பின்னாடி திரும்பிப் பாருங்கள் ஜெயலலிதாவிடம் அமைச்சராக இருந்து விட்டு, நிமிஷம் தோறும் ஜெயலலிதா படத்தை சட்டையில் வைத்திருந்த நயினார் நாகேந்திரன் எப்படி மோடி படத்தை மாற்றினார் என்று கேட்பீர்களா?

பெற்று வளர்த்த அப்பனை தூக்கி எறிய எப்படி மனம் வந்தது என அன்புமணியை பார்த்து கேளுங்கள்.

நள்ளிரவில் தூக்கத்தில் கனவு கண்டு, மனைவியின் பேச்சைக் கேட்டு தன் படத்தையே தூக்கி எறிந்து விட்டு, மோடி படத்தைப் போட எப்படி மனம் வந்தது என சரத்குமாரிடம் கேட்பீர்களா?

தேசிய அளவில் திடீரென கூட்டணியை மாற்றும் நிதீஷ் குமாரை கேளுங்கள், மாதவராவ் சிந்தியா மகன் ஜோதிஆதித்ய சிந்தியாவை கேளுங்கள், ஒரு நாளில் கேபினட் அமைச்சரான கதையை கேளுங்கள். ஒரே நாளில் பவன் கல்யாண் மாறியது எப்படி? துணை முதல்வர் பதவிக்காகவா என கேளுங்கள்.

அன்று எம்.ஜி.ஆர், அவர்கள் தி.மு.க. பொதுச்செயலாளர் இரா.நெடுஞ்செழியன், பொருளாளர் மாதவன், ப.உ.ச., நாஞ்சிலார், ராசாராம் என திமுகவினரை சேர்த்துக்கொண்டு அதிமுகவை பலமாக்கினார். இன்று கணக்கு மாறுகிறது. அதிமுகவினரையும் அரவணைத்து திமுக பலம் உயருகிறது. வெளியேறும் காலம் முடிந்து, வரும்காலம், வருங்காலமாய் தளபதி சாதனையால் நிரம்பி வழிகிறது.

இதற்காகத்தான் எச். ராஜா சொன்னார், ஸ்டாலின் இஸ் மோர் டேஞ்சர் தென் கருணாநிதி, டேஞ்சர் யாருக்கு, நாட்டை கொள்ளை அடிப்போருக்கு, தமிழ்நாட்டிற்கு நிதி தராமல் ஏமாற்றுவோருக்கு.

சட்டையில் படம் மாற்றுவது தவறல்ல. ஏழரை லட்சம் கோடி ஊழல் செய்தவர் மோடி என்று சொன்ன சி.ஏ.ஜி. அதிகாரிகளை இடம் மாற்றியதுதான் தவறு.

40,000 கோடி ரபேல் என்றால், பைல் தொலைந்து விட்டது என்று சொன்னவர்கள் இதுவரை கண்டுபிடிக்காதது தான் தவறு.

ரூ.500, ரூ.1000 நோட்டை ஒரே நாள் இரவு செல்லாது என அறிவித்ததுதான் தவறு. குடும்பத்திற்கு பதினைந்து லட்சம் தருவதாக சொல்லி ஏமாற்றியது தான் தவறு.

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவதாக கூறி ஏமாற்றியதுதான் தவறு.

தவறு. இந்தி கற்காததற்காக 3,500 கோடி நிதியை நிறுத்தி வைப்பதுதான்

வாஷிங்மெஷினில் சரத்பவார் மருமகளை சுத்தம் செய்து 25,000 கோடிக்கு பூ போட்டு மறைத்து, அஜித்பவர் காரியம் நடப்பதற்குள் அவசர அவசரமாக அவர் மனைவியை பதவி ஏற்க வைத்தது தான் தவறு. புயல், மழை நிவாரண நிதி தமிழ்நாட்டிற்கு தராததுதான் தவறு.

பா.ஜ.க.வுக்காக சைக்கிள் ஓட்டி, அரை ட்ராயர் போட்டு உழைத்த ஆர்.எஸ்.எஸ். எச். ராஜாவை மருத்துவமனையில் இரு முறை பார்த்த முதல்வருக்கு இணையாக அல்ல, ஒருமுறை கூட சென்னை வந்த போது பார்க்காத மோடி, அமித்ஷா மீது தான் தவறு.

உலகத்திலேயே ஓ.பி.எஸ். தான் கட்சி மாறிவிட்டார் போல என வானதி, தமிழிசை கதறுவதுதான் தவறு.

திருத்தணியில் புதிய பேருந்து நிலையத்திற்கு, அறிஞர் அண்ணா பெயர் ஏன் வைக்கவில்லை என எடப்பாடி கேட்கிறார். அண்ணா சிலைக்கும் எம்.ஜி.ஆர். சிலைக்கும் வித்தியாசம் தெரியாமல் மாலை போட்டவர் அறிஞர் அண்ணாவைப் பற்றி பேசுகிறார்.

அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் எச்சில் இலை போட்டதை ரசித்தவர் வருகிறார். அண்ணாவை உருவாக்கிய தந்தை பெரியார் படத்தை எடுத்துவிட்டு, தாமரை படம் ஒட்டியதை வேடிக்கை பார்த்தவர்களுக்கு அண்ணா பெரியாரைப் பற்றி பேச யோக்கியதை உண்டா?

கலைஞர் பெயரை திமுக அறக்கட்டளையில் தான் வைக்க வேண்டுமாம் எடப்பாடி சொல்கிறார். ஜெயலலிதா சிலை வைக்க சொன்னால் தன் மனைவி சிலையை, 275, அவ்வை சண்முகம் சாலையில் எடப்பாடி வைத்துவிட்டார் என எல்லோரும் சத்தமிட்ட பின், புதிய ஜெயலலிதா சிலையை வைத்த இந்த, யோக்கியவான் வந்துவிட்டார், உள்ளே சொம்பை எடுத்துவை கதையாக உள்ளது.

அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா குடிநீர், அம்மா சிமெண்ட் என எதற்கெடுத்தாலும் அம்மா பெயரை வைத்த போது பூரித்து மகிழ்ந்தவர்களுக்கு, 13 முறை சட்டமன்ற உறுப்பினர், 5 முறை முதல்வராக இருந்தவரின் பெயர் கூடாதாம்.

சாதாரண தொண்டனும் முதல்வராகலாம் என்பதற்கு எடப்பாடி சாட்சியாம். பெருமிதமாக சொல்கிறார்.

எடப்பாடி சாதாரண தொண்டன் தான். நீர் என்ன எமர்ஜென்சியை எதிர்த்தவரா? திருமணம் ஆனவுடன் ஓராண்டு ஜெயில் போனவரா? என்ன தியாகம் செய்தாய்?

கல்யாணராமன் படத்தில் கமலஹாசன் சொல்வார் எல்லாம் சரிதான் என்னை மாதிரி பல் கொஞ்சம் எடுப்பா இருந்தா அழகா இருக்கும் என்பார். எத்துப்பல்லு அசிங்கம் என்பதை மாற்றி பெருமையாக சொல்வார்.

அதைப்போல் சசிகலா அம்மையார் காலில் விழுந்து உருண்டு பதவி வாங்கிவிட்டு, எந்த தியாகமும் செய்யாமல் குறுக்கு வழியில் வந்ததை, துரோகத்தை, தொண்டன் என பெருமையாக கூறுகிறார் எடப்பாடி.

அறிஞர் அண்ணாவின் ஒரே வழித்தோன்றல் தளபதி ஸ்டாலின்தான். இதை நான் என்ன சொல்றது ஊரே சொல்கிறது.

தமிழ்நாட்டில் கூரை இல்லாத கிராமங்களும் இல்லை, என் தலைவன் ஸ்டாலின் பெயரை அறியாத கிராமங்களும் இல்லை. தடம் இல்லாத வீடுகளும் இல்லை, என் தலைவன் படமில்லாத வீடுகளும் இல்லை. உயிர் வெல்லமல்ல வெல்லப்போது தளபதி ஸ்டாலினைத் தவிர வேறு எவருமில்லை.